2007 அக்டோபர் 18]

6—

கட்டட வசதி

*21782—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டில் சொந்தமாகக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட மேட்டூர் நகரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரம். தினந்தோறும் பத்திரப் பதிவுகள் அதிகமாக நடந்து கொண்டிருக்கிற பகுதியான காரணத்தினாலே, இல்லை என்று சொல்லாமல் வாரி வழங்கிக் கொண்டிருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அரசு, அவசியத் தேவையைக் கருதி நடப்பாண்டிலே அந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தை மேட்டூர் அணைப் பகுதியிலே கட்டுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலித்து நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதேவேளையில், மேட்டூரை அடுத்திருக்கிற கொளத்தூர் பகுதியும் பத்திரப் பதிவு அதிகமாக இருக்கிற பகுதி. அங்கே வாரத்தில் செவ்வாய், வியாழன் என்று இரண்டு நாட்கள் மட்டுமே பத்திரப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் அந்த அலுவலகம் இயங்கி வருகிறது. அங்கே வாடகைக் கட்டடத்தில் இயங்கினாலும்கூட, அந்த இரண்டு நாட்கள் பத்திரப் பதிவு என்பதை தினமும் செய்யக்கூடிய அளவிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற பொதுமக்களின் வேண்டுகோளை முன்வைத்து, அரசு அதை நிறைவேற்றித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடம் குறித்துக் கேட்டார்கள். இப்போது பத்திரப் பதிவு சம்பந்தமாக துணைக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக எழுத்துமூலமாகத் தெரிவித்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலும், கடவூர் ஒன்றியம், தரங்கம்பட்டியிலும் சார்பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு இடங்களிலும் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 20 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதுசம்பந்தமாக, கட்டடங்கள் கட்டுவதற்குரிய

2007 அக்டோபர் 18]

நடவடிக்கைககளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க அவருடைய கோரிக்கை, வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

7—

தொழிற்சாலை

***25947—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் பகுதியில் தொழிற்பூங்கா மற்றும் தொழிற்சாலைகளை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் பகுதியில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் தொழிற்பூங்கா போன்ற தொழிற்சாலைகளை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பகுதியில் இப்போது நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு இல்லாமல் எல்லோருமே (குறுக்கீடு) நம்முடைய வேலூரிலே அதிகமாக இருப்பதற்குக் காரணம் அங்கே பொறியியல் கல்லூரிகள் நிறைய உள்ளன, வி.ஐ.டி.—யிலே மட்டும் 15,000 இளைஞர்கள் படிக்கிறார்கள். இப்படிப் பல பேர் படித்துவிட்டிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கெல்லாம் இன்று அரசாங்க வேலை கொடுக்க முடியவில்லை. அரசாங்க வேலை இல்லாத ஒரு சூழலில், அவர்கள் சொந்தமாக ஒரு தொழிலைத் தொடங்க

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS